www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

NFWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| இந்துசமயம் Hinduism | Two Hours / Gr -13 (2023) | 42 | T | I |

## பகுதி - I

❖ 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாததைத் தெரிவு செய்க.

01) 1. திருவிருத்தம் 2. திருவாசிரியம் 3. பெரிய திருவந்தாதி 4. திருத்தாண்டகம் 5. திருவாய்மொழி

02) 1. ஆகம்ப்பிரியன் 2. சங்கீர்ணஜாதி 3. குணபரன் 4. விசித்திரசித்தன் 5. மத்துவிலாசன்

03) 1. சாந்திபருவம் 2. பாலகாண்டம் 3. கிஷ்கிந்த காண்டம் 4. சுந்தரகாண்டம் 5. உத்தரகாண்டம்

04) 1. மகிமா 2. கரிமா 3. தாரணை 4. ஈசத்துவம் 5. வசித்துவம்

05) 1. சங்கரர் 2. மெய்கண்டர் 3. மத்துவர் 4. நீலகண்டர் 5. இராமானுஜர்

❖ 06 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடிச் சொற்களைத் தெரிவு செய்க.

06) 1. ஆகமம் - பரசுருதி
2. வேதம் - சுருதி
3. திருமந்திரம் - தமிழ்மூவாயிரம்
4. யசுர்வேதம் - ஸ்திரிகர்மாணி
5. திருக்குறள் - உலகப்பொதுமறை

07) 1. குணபரஈச்சரம் - மகேந்திரவர்மன்
2. ஜலசயனம் - இராஜசிம்மன்
3. பிருகதீஸ்வரம் - இராஜராஜசோழன்
4. தர்மராஜரதம் - நந்திவர்மன்
5. வானவன்மாதேவீச்சரம் - இராஜேந்திரன்

08) 1. காமகலாவிலாசம் - சாக்த ஆகமம்
2. சிவநடனம் - சுவாமி விபுலானந்தர்
3. நல்வழி – ஔவையார்
4. தணிகைப்புராணம் - கச்சியப்ப முனிவர்
5. விநாயக திருவிரட்டை மணிமாலை – நம்பியாண்டார்நம்பி

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

09) 1. சங்ககாலம் - திருமுருகாற்றுப்படை
2. சங்கமருவிய காலம் - திருக்குறள்
3. பல்லவர்காலம் - கந்தபுராணம்
4. சோழர்காலம் - பெரியபுராணம்
5. நாயக்கர்காலம் - விஷ்ணுவித்தியம்

10) 1. சாங்கியம் - இருமைவாதம்
2. அத்வைதம் - ஒருமைவாதம்
3. துவைதம் - பேதவாதம்
4. விசிட்டாத்துவைதம் - பிரபக்தி
5. யோகம் - கணாதர்

❖ **11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் அ, ஆ என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. "அ" நிரலுக்கு ஏற்ற விதத்தில் "ஆ" நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தை தெரிவு செய்க.**

11)

| அ | ஆ |
|---|---|
| (1) வட்டக்களரி | A - அரிசயால் நிரப்பப்படுவது |
| (2) முள்ளுக்காவடி | B - கூத்து ஆடும் இடம் |
| (3) அம்மன் கரகம் | C - கட்டியம் கூறுதல் |
| (4) கொம்பு முறி | D - வன்பக்தி |
| (5) தரு | E - கண்ணகி வழிபாடு |

1. BDAEC 2. CDBAE 3. BADCE 4. BCADE 5. DACBE

12)

| அ | ஆ |
|---|---|
| (1) போர்த்துக்கேயர் காலம் | A - ஆறுமுகநாவலர் |
| (2) பொலநறுவைக் காலம் | B - திரிசூல வழிபாடு |
| (3) யாழ்ப்பாண இராச்சியகாலம் | C - சதுர்வேதி மங்கலம் |
| (4) ஒல்லாந்தர் காலம் | D - திருக்கரசைப்புராணம் |
| (5) ஆங்கிலேயர்காலம் | E – பறாளை விநாயகர் பள்ளு |

1. BCADE 2. BCDEA 3. CEBAD 4. ADEBC 5. EDBCA

13)

| அ | ஆ |
|---|---|
| (1) சிருஷ்டி | A - அபயகரம் |
| (2) ஸ்திதி | B - ஊன்றிய திருவடி |
| (3) சங்காரம் | C - உடுக்கை ஏந்தியகை |
| (4) திரோபவம் | D - தூக்கிய திருவடி |
| (5) அநுக்கிரகம் | E - தீ ஏந்திய கரம் |

1. BDAEC 2. CAEBD 3. ADECB 4. CBDEA 5. DCBAE

14)

| அ | ஆ |
|---|---|
| (1) மரபு வழிச் சாதனம் | A - இணையம் |
| (2) செல்வழி தொடர்பு | B - தொலைக்காட்சி |
| (3) வெளிப்புறச்சாதனம் | C - பொதுவிவாதம் |
| (4) தகவல் தொழிநுட்பம் | D - துண்டுப் பிரசுரங்கள் |
| (5) அச்சுக்கலை | E - முரசறைதல் |

1. EBACD 2. BADCE 3. ABDCE 4. CABDE 5. ECBAD



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

15) **அ** **ஆ**

(1) நம்மாழ்வார் A - பெருமாள் திருமொழி
(2) பெரியாழ்வார் B - திருப்பல்லாண்டு
(3) ஆண்டாள் C - 2ம் திருவந்தாதி
(4) குலசேகராழ்வார் D - திருவாய்மொழி
(5) பூதத்தாழ்வார் E - நாச்சியார் திருமொழி

1. DCBEA 2. BDCEA 3. CEADB 4. DBEAC 5. ADBEC

❖ **16 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) பட்டா பிரான் என அழைக்கப்படுபவர்.
1. பெரியாழ்வார் 2. இராமனுஜர் 3. அபிராமிப்பட்டர் 4. பட்டினத்தார் 5. வசிட்டர்

17) "மகவான், சதக்கிரது" என்ற பெயர்களால் வேதப்பாடல்களில் அழைக்கப்படும் தெய்வம்.
1. வருணன் 2. இந்திரன் 3. அக்கினி 4. சோமன் 5. உருத்திரன்

18) "திருவுருவங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல" எனக் கூறும் நூல்.
1. மனுஸ்மிருதி 2. விஸ்ணுஸ்மிருதி 3. கரண ஆகமம் 4. காமிக ஆகமம் 5. சுக்கிரநீதி

19) சங்க காலத்தில் இடம்பெற்ற வழிபாட்டம்சங்கள்.
1. நடுகல், படையல், தீமிதிப்பு 2. வெறியாட்டு, நடுகல், காவடி
3. வெறியாட்டு, நடுகல், பாவை நோன்பு 4. பாவை நோன்பு, தீமிதிப்பு, காவடி
5. நடுகல், பாவை நோன்பு, தவம்

20) "சூறாவளித்துறவி", "தேசபக்த மெய்ஞ்ஞானி" என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்ட இந்துமத சீர்திருத்தவாதி.
1. சுவாமி விவேகானந்தர் 2. சுவாமி விபுலானந்தர்
3. சுவாமி ஞானப்பிரகாசர் 4. தயானந்த சரஸ்வதி
5. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

21) "சிவாலய தரிசன விதி" எனும் நூலை எழுதியவர்.
1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 2. சுவாமி விபுலானந்தர்
3. கா.அருணாசலதேசிகர் 4. காசிவாசி செந்திநாதையர்
5. கைலாசநாதக் குருக்கள்

22) கன்மத்தின் செயல்கள் அடங்கிய சரியான தொகுதி.
1. இருத்தல், கிடத்தல், பரநிந்தை 2. கிடத்தல், மேவல், வகற்பம்
3. இருத்தல், இயற்றல், குரோதம் 4. பரநிந்தை, அஞர், மதம்
5. மேவல், விடுதல், நகை

23) கட்டுத்தளி கலை மரபிற்குரிய மன்னன்.
1. நந்திவர்மன் 2. இராஜசிம்மன் 3. இராஜேந்திரன்
4. இராஜராஜேஸ்வரன் 5. மகேந்திரவர்மன்

24) விநாயகருக்குரிய விரதங்களில் ஒன்று.
1. ஆவணிச்சதுர்த்தி 2. மாசிமகம் 3. சித்திரைப்பரணி
4. பிரதோஷம் 5. திருக்கார்த்திகை

25) இந்து தத்துவ அளவைகளில் அடங்காதது.
1. பிரத்தியட்சம் 2. அனுமானம் 3. பதார்த்தம்
4. ஆப்த வாக்கியம் 5. உவமானம்



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

26) சாங்கிய சூத்திரத்தை எழுதியவர்.
1. ஈஸ்வரகிருஷ்ணர் 2. கபிலர் 3. சங்கரர்
4. மத்துவர் 5. இராமனுஜர்

27) முப்பொருள்களுக்குமிடையேயுள்ள பிரிக்க முடியாத தொடர்பினை "அப்பிரதச்சித்தி" என்று கூறியவர்.
1. சங்கரர் 2. இராமானுஜர் 3. மத்துவர்
4. பாதராயணர் 5. மெய்கண்டதேவர்

28) நாட்டார் வழிபாட்டில் முக்கிய இடம் பெறுவது.
1. கிரியை 2. வேள்வி 3. சடங்கு
4. ஆகமவழிபாடு 5. கலையாடுதல்

29) பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்த சைவசமயம் சார்ந்த மூன்று பத்திரிகைகள் அடங்கும் தொகுதி.
1. இலங்கை நேசன், விஞ்ஞான வர்த்தினி, தினகரன்
2. விஞ்ஞான வர்த்தினி, வீரகேசரி, ஈழநாடு
3. இலங்கை நேசன், இந்து சாதனம், சைவ உதயபானு
4. சைவபோதினி, சைவ உதயபானு, தினகரன்
5. இந்து சாதனம், உதயன், வலம்புரி

30) திருநீற்றின் மறுபெயர்களுள் அடங்காதது.
1. விபூதி 2. பசிதம் 3. பஸ்மம் 4. இரட்சை 5. சாயா

❖ **31 தொடக்கம் 35 வரையான ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

31) இந்து சமயத்தின் சிறப்பம்சம்
1. அன்பேசிவம் எனக் கூறுகின்றது.
2. அதுசனா தனதர்மம் என்று வழங்கப்பட்டது.
3. பிறமதக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத தன்மையைக் கொண்டு விளங்குவது.
4. உலகளாவிய இலக்கியங்களிலே இசைப்பாடல் வடிவங்களை உள்ளடக்கிய சிறப்பும் இச் சமயத்திற்குண்டு.
5. வேற்றுமையில் ஒற்றுமை காண்பது.

32) சிந்துவெளிக்கால சமய நிலை
1. தரைப் பெண் வழிபாடு நிலவியது.
2. வழிபாட்டில் பலியிடுதல் ஆதாரங்கள் கிடைத்துள்ளன.
3. தொல்பொருட்கள் இந்து சமயச் சார்புடையன.
4. இலிங்க வடிவங்கள் கண்டெடுக்கப்பட்டன.
5. வர்ணன் முக்கிய தெய்வமாக வழிபடப்பட்டான்.

33) நடராஜமூர்த்தம்
1. சிவமூர்த்தங்களுள் ஒன்று.
2. சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளக்குவது.
3. மார்கழித் திருவாதிரையுடன் தொடர்புடையது.
4. ஆதியும் அந்தமும் இல்லா பரம்பொருள் தத்துவத்தை உணர்த்துவது.
5. சிதம்பரத்தில் தில்லைக் கூத்தன் என போற்றப்படுகிறார்.

34) சோழர் அரசும் சைவ நெறியும்.
1. அரச சின்னமாக நடராஜ சின்னம் காணப்பட்டது.
2. இலங்கையில் சிவாலயங்கள் அமைக்கப்பட்டது.
3. திருமுறைகள் தொகுக்கப்பட்டன.
4. சிவவழிபாடு திருக்காமக் கோட்டத்தில் சிறப்புப் பெற்றது.
5. சைவ சித்தாந்தம் கோட்பாட்டு ரீதியான வடிவம் பெற்றது.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

35) திருமூலரும், திருமந்திரமும்
1. திருமந்திரம் 3000 பாடல்களைக் கொண்டது.
2. திருமூலர் தர்மபுர ஆதினத்தை தோற்றுவித்தார்.
3. சமயம், தத்துவம், அறிவியல் என்பவற்றைக் கொண்ட கலைக்களஞ்சியம்.
4. திருவாவடு துறையில் யோகநிஷ்டையில் ஆழ்ந்தவர்.
5. திரு நந்தி தேவரிடம் சிவாகமங்களை கற்றவர்.

❖ **மேல் வரும் பகுதியில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 36 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| **A**<br>நமசிவாய தேசிகர் | **B**<br>விகற்பம் | **C**<br>இராசசூயம் | **D**<br>நகை | **E**<br>சாதனம் |
| **F**<br>2ம் சிவாலயம் | **G**<br>புருஷ பேதம் | **H**<br>பலம் | **I**<br>திருக்கைலாய பரம்பரை | **J**<br>படிமங்கள் |

36) திருவாவடுதுறை ஆதினத்துடன் தொடர்புடைய சோடி.
1. CG 2. AI 3. AC 4. FI 5. AD

37) வேதகால வேள்வியுடன் தொடர்புடைய சோடி.
1. GH 2. CE 3. GB 4. CG 5. GD

38) ஆணவமலத்துடன் தொடர்புடைய சோடி.
1. BA 2. HD 3. BD 4. BE 5. BJ

39) வேதாந்த சூத்திரம் என்ற நூலின் அத்தியாயங்கள் கொண்ட சோடி.
1. EH 2. ED 3. HD 4. BE 5. BH

40) பொலனறுவை காலத்தோடு தொடர்புடைய தொகுதி.
1. EJ 2. EF 3. CJ 4. CF 5. FJ

❖ **41 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்க.**

41) ஆகமும் அதன் தார்பரியமும்
1. இறைவனால் தோற்றுவிக்கப்பட்டமை.
2. கோயிற் கட்டடக் கலையும் கிரியையும் பற்றி விபரித்து கூறுவன.
3. ஆலய கர்ப்பக்கிரகம் கருங்கல்லாலும் மூலமூர்த்தி சல மூர்த்தியாகவும் அமைதல் வேண்டுமென சிறப்பித்து குறிப்பிடுகின்றது.
4. ஆகரம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு உலகியல், ஆன்மீகம், ஞானம் என்னும் துறைகளை விளக்கி நிற்கின்றன.
5. ஆகமம் என்பதற்கு தொன்று தொட்டு வரும் அறிவு எனவும் பொருள் கொள்வர்.

42) இராமாயணம்.
1. இராமணயத்தை வான்மீகி எழுதினார்.
2. இதனைத் தமிழில் துளசிதாஸர் எழுதினார்.
3. இராமபிரானை காவிய நாயகனாகக் கொண்டது.
4. 7 காண்டங்களையம் 24000 சுலோகங்களையும் உடையது.
5. இராம அவதாரம் சிவனின் அவதாரமாகக் கொண்டது.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

43) சம்பந்தர்.
1. சம்பந்தரை சமணர்கள் துன்புறுத்தினார்கள்.
2. திருக்கோலக்கா என்னும் தலத்தில் முத்துச்சிவிகை பெற்றார்.
3. திருமறைக் காட்டு திருக்கதவை திறக்க பதிகம் பாடினார்.
4. சமணர்களுக்கு எதிராக செயற்பட்டு சமய உண்மைகளை நிலை நாட்டினார்.
5. திருவையாற்றில் கைலைக்காட்சியைக் கண்டு களித்தார்.

44) பல்லவர்கால கட்டிடக்கலை.
1. அழியாத பொருட்களைக் கொண்டு முதன்முதலில் ஆலயம் அமைக்கப்பட்டது.
2. மகேந்திர வர்மன் காலத்தில் உருவாக்கப்பட்டது.
3. பல்லவர் காலக் கட்டிடக்கலை மூன்று கட்டங்களாக வகுக்கப்பட்டிருந்தது.
4. நந்திவர்மன் கற்றளி பாணியை உருவாக்கினான்.
5. சீயமங்களம், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களில் காணப்பட்ட ஆலயங்கள் சான்றாகும்.

45) முன்னேஸ்வரம்
1. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன முறையாக அமைந்த ஆலயம்.
2. தேரோடும் கோயில் என சிறப்பிக்கப்படுகிறது.
3. சிவராத்திரி விரதம் சிறப்பாக அனுட்டிக்கப்படும் ஆலயம்.
4. ஈழத்து புராதன சிவாலயங்களுள் ஒன்று.
5. வன்னி மரத்தை தல விருட்சமாக கொண்டது.

46) இந்து போர்ட் இராசரத்தினம்
1. சைவப் பாடசாலைகளை உருவாக்கினார்.
2. சைவ மரபுகளை பாதுகாக்க சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை உருவாக்கினார்.
3. அரசாங்க பாடசாலைகளுக்கு நன்கொடைகளை பெற்றுக்கொடுத்தார்.
4. கல்கத்தா பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெற்றார்.
5. ஆசிரிய கலாசாலையை உருவாக்கினார்.

47) 1ம் சிவாலயம்.
1. பொலநறுவையில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட சிவாலயமாகும்.
2. தலதா மாளிகை என பிழையாக வர்ணிக்கப்பட்டது.
3. வானவன் மாதேவீச்சரம் என அழைப்பர்.
4. இக் கோயில் யோத எல என்னும் கால்வாயின் அருகில் அமைக்கப்பட்டது.
5. 12 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டது.

48) அத்வைத் வேதாந்தம்
1. ஆன்மாக்களின் அறிவு தர்ம பூர்வமான ஞானம் எனக் கூறுகின்றது.
2. ஜீவன் முத்தியினை வலியுறுத்துகின்றார்.
3. பிரம்மம் உண்மையானது என்பதை ஏகான்மவாதம் மூலம் முன்வைத்துள்ளார்.
4. பிரம்மத்தை இரு நிலையில் வைத்து குறிப்பிடுகிறார்.
5. அவச்சேவ வாதத்தினூடாக உலக கருத்துக்களை முன்வைக்கின்றார்.

49) சிவஞானவேதம்
1. சகலாகம பண்டிதரால் இயற்றப்பட்டது.
2. பரபக்கம், அபக்கம் என 2 பிரிவுகளைக் கொண்டது.
3. கி.பி 12ம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுச்சி பெற்றது.
4. சைவ சித்தார்ந்தக் கருத்துக் கோட்பாட்டு ரீதியில் விளக்கும் நூலாகும்.
5. சிவப்பிரகாசம் இதன் வழி நூலாகும்.

50) சித்தர்கள்.
1. பக்தியை முதன்மைப்படுத்தியவர்கள்.
2. வாழ்வின் உறுதித் தன்மையை எடுத்துரைத்தவர்கள்.
3. சமயச் சடங்குகளுக்கு உட்பட்டவர்கள்.
4. சமயங் கடந்து சித்தம் ஒடுங்கி வாழ்பவர்கள்.
5. சித்து விளையாட்டுக்களைப் புரிந்தவர். (50 x 2 = 100 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு**
**நான்காம் தவணைப் பரீட்சை - 2023**
# National Field Work Centre, Thondaimanaru.
**4th Term Examination - 2023**

NFWC

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து நாகரிகம் II<br>Hindu Culture II | Three Hours 10 min<br>Gr -13 (2023) | 46 | T | II |

## பகுதி – II

❖ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. "இந்து நாகரிகத்தின் ஊற்றுக் கண்ணாக விளங்குவது சிந்து வெளி காலமாகும்" இக் கூற்றினை ஆதாரமாகக் கொண்டு மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

அ) சான்றாதாரங்கள்
ஆ) சிவ வழிபாட்டு முறைகள்
இ) நுண்கலைகள்
ஈ) வாழ்க்கை முறைகள்

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

agaram.lk

02. இந்து நாகரிகத்தை வளம்படுத்திய வகையில் புராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் விடயங்களில் ஆராய்க.

அ) பஞ்ச இலட்சணங்கள்
ஆ) புராணங்களின் வகைகள்
இ) வழிபாட்டு முறைகள்
ஈ) தத்துவ சிந்தனைகள்

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

03. "தென்னக வரலாற்றில் பல்லவர் காலம் பத்திநெறிகாலமாகும்" இக்கூற்றினை சான்றாகக் கொண்டு மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.

அ) மன்னர்களது பங்கும் பணியும்
ஆ) பக்தி இயக்கமும் அதன் செல்வாக்கும்
இ) திருக்கோயில்களின் வளர்ச்சி
ஈ) திருக் கோயில் வழிபாடு

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

04. இலங்கையின் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கு மேல்வரும் சமய நிறுவனங்கள் ஆற்றிய பணிகள் பற்றி விளக்குக.

அ) சைவபரிபாலன சபை

ஆ) இராம கிருஷ்ண மடம்

(10 + 10 = 20 புள்ளிகள்)

05. சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் ஆன்மா பற்றிய சிந்தனைகளை விளக்கி ஆராய்க.

(20 புள்ளிகள்)

06. "ஈழத்து சைவ சமய வளர்ச்சியில் சைவப் பெரியார்காசிவாசிசெந்தில் நாதையர் ஆற்றிய பணிகள் அளப்பரியன" ஆராய்க. (20 புள்ளிகள்)

07. சோழப் பெரு மன்னர் காலத்தில் ஏற்பட்ட நுண்கலைகளின் வளர்ச்சி பற்றிய விளக்குக.

(20 புள்ளிகள்)

08. இராமானுஜர் வேதாந்தத்தின் சிறப்புக்களை மேல்வரும் விடயங்களில் பரிசீலிக்குக.

அ) பரம் பொருட் கொள்கை

ஆ) ஆன்மாவுக்கும் பரம் பொருளுக்கும் இடையிலான தொடர்பு

(10+10 = 20 புள்ளிகள்)

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk